III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.29/2013

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt.R.Santhi, Translator
in accordance with the provision of Act I for 1873 on 01-07-2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜான் வெஸ்லி | Village | : |
| Father's Name | : வேதநாயகம் | Calling | : |
| Age | : | Taluk | : |

2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசராணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

நான் சொல்லி தான் என்னுடைய வழக்கறிஞர் வழக்குரையை தயார் செய்தார். நான் தமிழில் சொன்னேன். வழக்கறிஞர் ஆங்கிலத்தில் தயார் செய்தார். ஆங்கிலத்தில் தயார் செய்யப்பட்டதை தமிழில் மொழிபெயர்த்து படித்துக் காட்டப்பட்டதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் தற்பொழுதாவது தெரியுமா என்றால் தெரியும். வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் நான் எனது வழக்கறிஞரிடம் சொன்னபடிதான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் தமிழில் சொன்னேன். எனது வழக்குரை பத்தி 14 ல் மனோவா என்னை ஏமாற்றி வழக்கு அட்டவணை ஏ சொத்துக்கு ஒரு விக்கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் அப்படி சொல்லவில்லை அதற்கு நான் மறுப்பு தெரிவிக்கின்றேன். என்னுடைய வழக்குரையில் என்னை கடத்தி கொண்டுபோய் வைத்திருந்ததாக சொல்லியிருக்கிறேன். எங்கே என்னை வைத்திருந்தார்கள் என்று சொல்லமுடியுமா என்றால் காலஹஸ்தி பக்கம் வைத்திருந்தார்கள் அந்த இடத்தின் பெயர் எனக்கு தெரியவில்லை. யார் என்னை காப்பாற்றினார்கள் என்றால் யாரும் என்னை காப்பாற்றவில்லை நானாக தப்பித்து வந்துவிட்டேன். நான் தப்பித்து வந்த மாதம் அக்டோபர் தேதி எனக்கு தெரியாது வருடம் 2012. நான் வந்த பிறகு 2ம் பிரதிவாதி துரைராஜிடம் போய் விக்கிரய ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தேனே பணம்

கொடுங்கள் என்று கேட்டேனா என்றால் நான் துரைராஜிடம் கேட்டேன். என்னிடம் காட்டப்படுகின்ற வா.த.சா.ஆ.3 ஆவணமான முதலமைச்சருக்கு அனுப்பப்பட்ட மனு 13.09.2012 தேதியிட்டுள்ளது என்றால் சாட்சி வா.த.சா.ஆ.3 ஆவணத்தில் தேதி குறிப்பிடப்பட்டிருக்கின்ற அந்த குறிப்பிட்ட பகுதியை பார்த்துவிட்டு தனக்கு சரியாக ஞாபகம் இல்லை என்று கூறுகின்றார். இந்த புகாரை தவிர வேறு யாருக்கொல்லாம் புகார் கொடுத்திருக்கின்றேன் என்றால் டி.2 அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையம், எக்மோர் கமிஷனர் ஆபிசில் 2 புகார் கொடுத்திருக்கின்றேன். முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு புகார் கொடுத்த கால கட்டத்தில் தான் இந்த புகார்களை கொடுத்தேன் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. வா.த.சா.ஆ.3 புகாரில் என்னுடைய பவர் ஏஜென்ட் பிலால் அகமது 3 மாதம் என்று கூறிவிட்டு 3 ஆண்டுகள் காலக்கெடு போட்டு என்னை ஏமாற்றி இருக்கின்றார் என்று கூறியிருக்கிறேன் என்றால் அவர் என்னை ஏமாற்றவில்லை. அசல் வழக்கு எண்.2/2012 வழக்கான மனோவா தொடுத்த வழக்கில் நான் 2வது பிரதிவாதியா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கில் 23.04.2012 ல் நான் பதிலுரை தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கின்றேன்.

(அறிவார்ந்த 2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).